www.tamilarangam.net


# ஈழச்செய்தி
EELAM NEWS

வெளியீடு 2
ஆனி 1989


## பேச்சுவார்த்தை நாடகங்கள்.

சிறீலங்கா அரசாங்கத்தின் ஊதுகுழல் பத்திரிகைகளில் முன்பக்கச் செய்திகள்... முழுப்பக்கப் படங்கள், புலிகள் கொழும்புக்கு வருகிறார்கள்.... கூலிப்பத்திரிகைகள் பெரிய எழுத்துக்களில் முழங்குகின்றன. இதோ வந்துவிட்டார்கள்...... பக்கம் நிறைந்த - படங்கள் பத்திரிகைகளை நிறைக்கின்றன. அடுக்கடுக்கான அடக்குமுறைக் கொடுமைகளினால் அதிர்ந்துபோன எமது மக்களின் மீது மீண்டும் ஏமாற்று விதைகள் தூவப்படுகின்றன.

பேச்சுவார்த்தைகள் யாருக்கும் யாருக்குமிடையில் நடக்கிறது. இன்றைய எம்மக்களின் துன்பங்கள் யாவுக்கும் யாரும் யாரும் காரணமானார்களோ அவர்கள்தான் பேசுகிறார்கள். எதைப்பற்றி ? அதைப்பற்றி நாம் யாருக்குமே சொல்லமாட்டோம் என்றும் சொல்கிறார்கள். ஆனால் மக்களே, சமாதானத்தின் பகைவர்கள் எதைப்பற்றிப் பேசுவார்கள்? அமைதியின் எதிரிகள் எதைப்பற்றிப்பேசுவார்கள்? ஜனநாயகத்தின் விரோதிகள் - எதைப்பற்றிப் பேசுவார்கள்.....? இதற்கு விளக்கம் வேறு தேவையா...?

இந்திய-சிறீலங்கா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் தமிழ்ப் பேசும் மக்களுக்கான குறைந்தபட்ச உரிமைகளை வழங்க வழிசெய்து உருவாக்கப்பட்ட மாகாணசபைகளுக்கான உரிமைகளை இன்னும் தரமறுக்கும் அதே சிறீலங்கா அரசுடன், வடக்கு கிழக்கு புனர் நிவாரண வேலைகளைச் செய்வதற்காக வெளிநாடுகள் வழங்கிய கோடிக்கணக்கான ரூபாக்களை கொடுக்க மறுக்கும் அதே சிறீலங்கா அரசு.... இன்னும் திட்டமிட்ட குடியேற்றங்கள் மூலம் தமிழ் மண்ணைப் பறிக்கும் அதே சிறீலங்கா அரசு... திட்டமிட்ட சதிகள் மூலம் தமிழ்-முஸ்லிம் மக்களிடையே மோதல்களைத் தூண்டிவரும் அதே சிறீலங்கா அரசு... வடமராட்சியிலும் இதர தமிழ்ப்பகுதிகளிலும் ஆயிரக்கணக்கான தமிழ்ப்பேசும் மக்களைப் படுகொலை செய்தும் இன்னும் இரத்தவெறியடங்காத அதே சிறீலங்கா அரசுடன்தான் நிபந்தனைகள் எதுவுமின்றி புலிகள் பேச்சுவார்த்தை நடத்துகிறார்கள்.

ஒரு புறமாக தற்போதைய மாகாணசபைகளைக் கலைத்து இதைவிட அதிக அதிகாரம்(?) உள்ள மாகாணசபைகளைத்தருவோம் எனப் புலிகளுடன் பேசும் சிறீலங்கா அரசு மறுபுறத்தில் மாகாணசபை அமைப்பையே இரத்துச் செய்துவிடுவதாக ஜே.வி.பிக்கு இர

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கசிய வாக்குறுதியளித்து தூது விடுகிறது.

அதேசமயம் கொழும்பிலே நட்சத்திர ஓட்டலிலே சுகவாசம், ஆயிரக்கணக்கான ரூபாயில் உணவு விருந்து, எதிரிகளுடன் கட்டியணைப்பு கைகோர்ப்பு, எதிரிகளின் வாகனங்களிலும் ஹெலிகோப்ரர்களிலும் புலிகள் பயணம். ஆனால் தமிழ்ப்பகுதிகளிலோ அப்பாவி மக்கள் பயணம் செய்யும் பஸ்கள் எரிப்பு, மக்களுக்கு சேவை செய்யும் உத்தியோகத்தர்கள் படுகொலை, தம்மை ஆதரிக்க மறுத்தவர்கள் படுகொலை, புத்திஜீவிகள் படுகொலை இது புலிகளின் தொடரும் அராஜகம்.

இவற்றிலிருந்தாவது மக்கள் ஒரு விடயத்தை புரிந்துகொள்ள வேண்டும். ஏமாற்றுக்காரர்கள் யார்? துரோகிகள் யார்? யார் எதிரிகளிடமே இன்று ஆயுதத்தைப் பெற்று எம்மவர்களையே கொல்பவர்கள்? யார் சமாதானத்தின் பகைவர்கள் என்பதை.

பலவீனப்பட்டுப்போன நிலையில் இருக்கும் சிறீலங்கா அரசு, புலிகள் ஆகிய இரு தரப்பினருமே தமது இறுதிக்கட்டத்திலும்கூட மக்களை ஏமாற்றுவதையே நோக்கமாகக்கொண்டுள்ளனர் என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்த ஏமாற்று நாடகங்களில் மயங்கிவிடாது ஒரு பிரகாசமான எதிர்காலத்தை நோக்கி ஒன்றுபட்டு உழைப்போம்.

" எமது அனைத்து உழைப்பும் மக்களுக்காகவே. "

"மாகாண அரசுக்கு தடைபோட்டால் தெற்கு பாட்டாளிகளுடன் சேர்ந்து போராடத்தயங்கோம்" - தோழர் பத்மநாபா.

சிறீலங்கா அரசு தமிழ்பேசும் மக்களது ஆட்சியைக் கலைக்க - தமிழர்களது நலன்களைப் பாதிக்க மாகாண அரசின் அதிகாரப்பரவலாக்கலுக்கு தடையாக இருப்பின் தென்னிலங்கை பாட்டாளி மக்களுடன் சேர்ந்து போராடி இவ்வரசை விரட்டத்தயங்கமாட்டோம். அத்துடன் எமது ஆயுதப்போராட்டத்தை முன்னெடுத்து ஈழக் குடியரசு விழாவை நடத்தவும் தயங்கமாட்டோம் - இவ்வாறு மட்டக்களப்பில் நடந்த மே தின விழாவில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் தோழர் பத்மநாபா கூறியுள்ளார். இக்கூட்டத்தில் ஆண்களும் பெண்களுமாக பெருந்திரளான வாலிபர்களும் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

(வீரகேசரி 2.5.89)

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 'சூழ்ச்சிகள்' சதிகளை முறியடித்து அதிகாரத்தைவலுப்படுத்துவோம்'

## ஈ.பி.ஆர்.எல்.எவ். மே தினச்செய்தி

(அன்டன் எட்வேர்ட்)

'தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசமான வடக்கையும் கிழக்கையும் பிரிக்கும் சூழ்ச்சிகள், இனங்களை மோதவிடும் சதி முயற்சிகள் என்பவற்றை முறியடித்து எமது அதிகாரத்தை மேலும் வலுப்படுத்த இன்றைய மே தினத்தில் சபதம் எடுப்போம்.'

இவ்வாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலைமுன்னணியின் செயலாளர்நாயகம் திரு. க. பத்மநாபா விடுத்துள்ள மே தினச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;-

'தமிழினம் தன்னைத் தானே ஆளும் உரிமையை வடக்கு - கிழக்கு மாகாண அரசு மூலம் பெற்றுக்கொண்டுள்ளது. இதனை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் இடையூறுகள் இருந்த போதிலும் சட்டரீதியாக தமிழ்மொழி, சிங்கள மொழியைப் போன்றே இன்று அரசகரும மொழியாக்கப்பட்டுள்ளது. மலையகப் பாட்டாளிகளின் பறிக்கப்பட்ட அரசியலுரிமையை; பிரஜா உரிமை, வாக்குரிமை என்பவற்றை மீளப் பெறுவதற்கான சட்ட மூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இச் சம்பவங்கள் ஈழ விடுதலைப் போராட்ட பாதையில் ஒரு திருப்புமுனையாகும்.

இம் மே தினத்தில் மாகாண அரசைப் பலப்படுத்துவோம், மாகாண அரசு தொழிலாளர் விவசாயிகளுக்கு உதவ வேண்டும் என்ற பதாகையை உயர்த்திப் பிடிப்போம்.

வடக்கு-கிழக்கு மாகாண அரசினூடாக சுதந்திரம், ஜனநாயகம், சமாதானம் என்ற மக்களின் அபிலாஷைகளை உயர்த்திப் பிடித்து, நாட்டில் நவகாலனித்துவ, நவபாஸிஸ அமைப்பைத் தகர்த்தெறிந்து மக்கள் ஜனநாயகப் புரட்சியை முன்னெடுத்துச் செல்ல இம் மே தினத்தில் அனைத்து உழைக்கும் மக்களும் உறுதிபூண வேண்டும்,'

# "பேச்சுக்களின் நோக்கம் சந்தேகத்தை தருகிறது"

## ஈ. பி. டி. பி. அறிக்கை

சென்னை,

இலங்கை ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா உண்மையிலேயே தமிழர் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அக்கறை கொண்டவராக இருப்பின் வடக்கு-கிழக்குமாகாண சபைக்கு ஏற்ற அதிகாரங்களை பகிர்ந்தளிப்பதுடன் வடக்கு - கிழக்கு இணைப்புத் தொடர்பாக சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்ற பிடிவாதத்தையும் கைவிடவேண்டும். இலங்கை அரசாங்கம் இதற்கு தயாரில்லாதுவிடில் புலிகளைப் பேச்சு வார்த்தைக்கு அழைக்கும் அதன் நோக்கத்தை நிச்சயம் சந்தேகிக்க வேண்டியிருக்கிறது.

இவ்வாறு ஈழ மக்கள் ஜனநாயக கட்சி (ஈ. பி. டி. பி.) விடுத்துள்ள பத்திரிகையறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

இப் பத்திரிகையறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை எதிர்த்துப்பேசிய ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவிடமிருந்து எத்தகைய தீர்வினை விடுதலைப் புலிகள் எதிர்பார்க்கின்றனரோ தெரியவில்லை.

சிங்கள மக்களை இந்திய அமைதிப் படையினர் தொல்லைப்படுத்தி வருவதாக விஷமமான பிரசாரத்தில் இலங்கை அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. இந்திய அமைதிப் படையினர் வெளியேறினாலேயே திருகோணமலையில் தாம் விரும்பியவாறு குடியேற்றம் செய்யலாமென்ற உள்நோக்கமே இதற்கு காரணமாகும்.

ஆனால் ஒப்பந்தத்தின் பின்னருங்கூட குடியேற்றங்கள் பரவலாக நடந்துள்ளன.

இருந்தும் இந்திய அமைதிப் படையினரை வெளியேற்றுவதன் மூலம் தமிழ் மக்களுக்குள்ள கொஞ்ச நஞ்ச பாதுகாப்பினையும் இல்லாமல் செய்யவே இலங்கை அரசாங்கம் முனைந்துள்ளது.

# "வட-கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்டால் அமைதி குலையும்'

## நவசமசமாஜ பிரமுகர் மணியம் பேச்சு

(எஸ்.என். பிள்ளை)

வடக்கு-கிழக்கு மாகாண சபை அமைக்கப்பட்டதினால் இன்று அப்பகுதியில் அமைதி நிலவுகிறது. ஆனால், வடக்கு-கிழக்கு மாகாண சபையை கலைக்கும் நோக்கம் அரசாங்கத்திற்கு உண்டு. அப்படி ஒரு நிலை ஏற்படுமானால் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் மீண்டும் கலவரம் ஏற்படும் என ஹெவ்லொக் மைதானத்தில் நடைபெற்ற ஐக்கிய சோஷலிஸ முன்னணியின் மே தினக் கூட்டத்தில் உரையாற்றிய நவசமசமாஜக் கட்சியைச் சேர்ந்த திரு. வி.எஸ். மணியம் கூறினார்.

திரு. மணியம் தொடர்ந்து உரையாற்றுகையில், இடதுசாரி இயக்கங்களை ஒழித்துக்கட்ட இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தின் எதிர்காலம் குறித்து இன்று கேள்வி எழுந்துள்ளது. மாகாண சபைக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

இந்தியப்படைக்கு பதிலாக அமெரிக்க படையை அழைப்பதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. அமெரிக்க இராணுவம் இங்கு வருமானால் இந்தியப்படை அதனைப் பார்த்துக்கொண்டிருக்காது.

இந்தியப்படைகள் திரும்பிச் சென்றாலும் இந்திய படையினரின் ஆயுதங்கள் இங்கே இருக்கும் என்பதை சகலரும் கவனத்தில்கொள்ள வேண்டும் எனவும் அவர் தனது உரையில் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

* மாதமொன்றுக்கு குறைந்த பட்ச சம்பளம் ரூபா 2,500.
* தொடக்கத்தில் உணவு முத்திரை வைத்திருப்பவர்கள் அனைவருக்கும் சனசவிய திட்டத்தின் உதவி வழங்குதல், பின்னர் இவ்வசதி ஏழைகளுக்கும் உதவி தேவைப்படுவோருக்கும் வழங்குதல்.
* பணவீக்கத்தையும் விலைவாசி உயர்வையும் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுத்தல்.
* அனைத்து ஊழியர்களுக்கும் உயரும் ஒவ்வொரு வாழ்க்கைப் புள்ளிக்கும் ரூபா 5வீதம் சம்பள உயர்வு கொடுக்க வேண்டும்.

## வாக்காளராக விண்ணப்பிக்க

# வன்னிப்பகுதி மலையகமக்களுக்கு ஈ. பி. ஆர். எல். எப். உதவும்

(நமது நிருபர்)

வன்னிப் பிராந்தியத்தில் உள்ள மலையக மக்கள் தங்களை வாக்காளராகப் பதிந்துகொள்வது தொடர்பான சகல விபரங்களையும் இப்பகுதியில் அமைந்துள்ள ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அலுவலகத்தில் பெறலாம் என்று இம்முன்னணி அறிக்கை தெரிவிக்கிறது.

இம்மக்களுக்கு உதவ பதிவதற்கான சகல பத்திரங்களும், ஊழியர்களும் அலுவலகத்தில் தயாராக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வெளியீடு

ஈ.பு. மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி - (பிரான்சு)

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 'வெலிஓயா மாவட்டம்' என்று வடக்கில் ஒரு மாவட்டம் இல்லை!

## வட-கிழக்கு முதல்வர் தெரிவிப்பு

(நமது நிருபர்)

''வட மாகாணத்தில் வெலி ஓயா மாவட்டம் என்ற பெயரில் ஒரு மாவட்டம் இல்லை என்று வட-கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப் பெருமாள் தெரிவித்தார்.

இராணுவ நடவடிக்கை இடைநிறுத்தத்தை தொடர்ந்து வன்முறை, சதிநாசச் செயல்களில் ஈடுபட்டுள்ளோர், வேண்டுகோள்களுக்கான தீர்ப்பில் அரசாங்கம் விடுத்த விளம்பர அறிக்கையில், வட மாகாணத்தின் கீழ் வெலிஓயா மாவட்டம் என்ற ஒன்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்திவு ஆகிய ஐந்து மாவட்டங்களே உள்ளன. வெலிஓயா என்ற பெயரில் ஒரு மாவட்டம் இல்லை மத்திய அரசு இப்படி விஷமத்தனமான காரியங்களில் ஈடுபடுவது தமிழ் மக்களின் மனங்களை புண்படுத்துவதாகும்'' என்று தெரிவித்த முதல்வர் ''வெலிஓயா என்ற பெயரில் ஒரு மாவட்டம் அழைக்கப்படுவதை வட-கிழக்கு மாகாணசபை அனுமதிக்காது'' என்றும் தெரிவித்தார்.

# வட-கிழக்கு மாகாணசபை எழுத்தாளர்களை ஊக்குவிக்கும்

மண்டூர்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள எழுத்தாளர்களை ஊக்குவிக்க வடக்கு-கிழக்கு மாகாணசபை முன்வந்துள்ளது.

'கிழக்கிலங்கையில் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் எழுத்துத்துறை மிகவும் மந்தநிலையில் உள்ளது. எனவே எழுத்தாளர்களை ஊக்குவித்து மீண்டும் எழுத்துத்துறையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த எழுத்தாளர் ஒன்றியம் ஒன்று உருவாக்கப்படவுள்ளது. இதன்மூலம் எழுத்தாளர்கள் ஊக்குவிக்கப்படுவதுடன் அவர்களின் ஆக்கங்களுக்கு பிரசுர வசதியும் செய்து கொடுக்கப்படும்' என்று வடக்கு-கிழக்கு மாகாண சபை உறுப்பினர் திரு. நா. நேசராசா விடுத்துள்ள செய்தி ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நடவடிக்கைக்கு முன்னோடியாக எழுத்தாளர்களின் விபரம் திரட்டப்படவுள்ளது. எனவே மட்டக்களப்பு மாவட்ட எழுத்தாளர்கள் தமது விபரங்களை மாகாணசபை உறுப்பினர் திரு. நேசராசாவுக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

### தீவிரவாத குழு உறுப்பினர்கள்

# பாராளுமன்றத்துக்கு வந்திருப்பதை பலவீனமாக நினைத்தலாகாது!

## மட்டு. மாவட்ட எம்.பி. சாம் தம்பிமுத்து பேச்சு

(எம். பி. எம். அஸ்ஹர், வீ. தனபாலசிங்கம்)

வடக்கு - கிழக்கு மாகாண சபையைப் பற்றி சர்ச்சைக் கிளப்பி அரசியல் ஆதாயம் தேடும் முயற்சியை கைவிடுங்கள். அரசாங்க தரப்பினருக்கு அசௌகரியத்தை ஏற்படுத்த விரும்பினால் வேறு விடயத்தை எடுத்துப் பேசுங்கள். தீவிரவாத குழுக்களின் உறுப்பினர்கள் பாராளுமன்றத்துக்கு வந்திருப்பதை பலவீனத்தின் அறிகுறியாக நினைக்காதீர்கள்' என மட்டக்களப்பு மாவட்ட எம். பி.யான திரு. சாம் தம்பிமுத்து (தமிழர் விடுதலை கூட்டணி) செவ்வாயன்று பாராளுமன்றத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களை நோக்கி கூறினார்.

நிதிய மைச்சுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய திரு. தம்பிமுத்து, ''அன்று ஒரு நாள் இச்சபையில் உரையாற்றிய திரு. அநுரா பண்டாரநாயக்கா சிங்களம் மட்டும் சட்டத்தின் சூத்திரதாரிகள் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா அல்ல என்று நிருபிக்க முயன்றார். சில தசாப்தங்களுக்கு முன்னர் சிங்களம் மட்டும் சட்டத்தின் பிதாக்கள் தாங்கள் தான் என பரஸ்பரம் போட்டி போட்டு உரிமை கோரியவர்கள் இன்று பிதாக்கள் தாங்கள் அல்ல என்பதை நிரூபிக்க போட்டி போடுவதை காணமுடிகின்றது என்றும் குறிப்பிட்டார்.

இக்கட்டத்தில் குறுக்கிட்ட கம்பஹா மாவட்ட எம். பி. திரு. லக்ஷ்மன் ஜயக்கொடி உறுப்பினர் விவாதத்துக்கு புறம்பான விடயத்தை பேசுகின்றார். திரு. அநுரா பண்டாரநாயக்காவும் சபையில் இல்லை. எனவே வேறு சந்தர்ப்பத்தில் இப்பிரச்சினை குறித்து பேசலாம் என்று ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்பினார்.

ஆனால் தான் பேசுகின்ற விடயம் புனரமைப்பு நடவடிக்கைகளுடன் தொடர்புடையவை தான். அவற்றை கூறாமல் புனரமைப்பு பற்றி கதைப்பதில் அர்த்தமேதுமில்லை என்று பதில் அளித்த திரு. தம்பிமுத்து தனது உரையில் வடக்கு-கிழக்கு புனரமைப்பு நடவடிக்கைகளில் காணப்படும் பாரிய குறைபாடுகளை சுட்டிக் காட்டினார்.

கள் திருத்தப்படவேண்டிய நிலையில் உள்ளன.' இதில் யாழ். போதனா வைத்திய சாலையும் அடங்கும். யாழ். ஆஸ்பத்திரியை சீர்திருத்த 2 கோடியே 50 லட்சம் ரூபா தேவைப்படுகின்றது.

வடக்கு-கிழக்கு போக்குவரத்து சேவைக்கென 40 இரட்டைத் தட்டு பஸ்கள் அனுப்பப்படும் என உறுதியளிக்கப்பட்டது. இதுவரை ஒரு பஸ் கூட வந்து சேரவில்லை. அப்பிரதேசத்துக்கு இரட்டைத் தட்டு பஸ்கள் பொருத்தமற்றவையாயின் வேறு பஸ்கள் அனுப்பிவைக்கவேண்டும்.

பாதுகாப்பு காரணங்களின் நிமித்தம் வடக்கு - கிழக்கு பகுதிகளில் உள்ள திணைக்களங்கள் கூட்டுத்தாபன கிளைகளில் இந்த வாகனங்கள் கொழும்புக்குக் கொண்டுவரப்பட்டன. இவை திருப்பி அனுப்பப்படவில்லை. புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு இவ் வாகனங்கள் அவசியமானவை.

### புகையிரத சேவை

யாழ்ப்பாணத்திலிருந்து காங்கேசன்துறைவரையான புகையிரதப்பாதை இன்னும் திருத்தப்படாமல் இருக்கின்றது. இதைத் திருத்த உடன் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பேச்சு குறித்து ஈ.பி.ஆர்.எல்.எப்.

(நமது நிருபர்)

'இலங்கை அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெற்று வரும் பேச்சுவார்த்தையின் பின்னணியானது சமாதான ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தி ஜனநாயக சூழ்நிலை ஏற்பட்டு வருவதை முழுமையாகத் தடுப்பதாகவே உள்ளது' என்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மட்டக்களப்பு பிராந்திய அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் மூலம் குற்றஞ்சாட்டியுள்ளது.

தமிழ் மக்கள் இந்த உண்மைகளை இனங்கண்டு கொள்வதன்மூலம் விடுதலைப் புலிகள் இயக்கத்தினது நோக்கம் எதுவென்பதை தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும். இதனை அனைத்து ஜனநாயக முற்போக்கு சக்திகளும் ஏகோபித்த முறையில் கண்டிக்க வேண்டும் எனவும் அறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குமிடையில் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தையின் பின்னணியில் மூடி மறைக்க முயலும் பல உண்மைகளை மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டிய அவசியம் இன்றைய சூழ்நிலையில் ஏற்பட்டுள்ளது என்றும் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது.

# நெல்லியடியில் சட்டத்தரணி கடத்தப்பட்டு சுட்டுக் கொலை

## உடுப்பிட்டியில் பஸ் எரிப்பு

(யாழ். அலுவலக நிருபர்)

இளைப்பாறிய பாடசாலை அதிபரும் சட்டத்தரணியுமான வல்லிபுரம் மகாலிங்கம் திங்கள் இரவு நெல்லியடி குஞ்சர் கடையில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவர் கடந்த சனியன்று தனது நெல்லியடி வீட்டிலிருந்து கடத்திச் செல்லப்பட்டிருந்தார்.

குஞ்சர்கடை பகுதியில் நேற்று இவரது சடலம் கிடக்கக் காணப்பட்டது. சடலத்தின் அருகே 'இந்தியப் படையினருடன் தொடர்பு வைத்திருந்ததற்கான தண்டனை' என்ற புலிகளின் அறிவிப்புக் காணப்பட்டது.

### பஸ் எரிப்பு

இதேவேளை இந்தியா வழங்கிய பஸ் வண்டிகளில் மேலும் ஒரு பஸ் திங்களன்று உடுப்பிட்டியில் வைத்து எரிக்கப்பட்டது. கடந்த 10 தினங்களில் எரிக்கப்பட்ட 4 ஆவது பஸ் இது வாகும்.

## மட்டுநகரில்

# பத்மநாபா தலைமையில் ஈ.பி ஆர்.எல்.எப். மேதினம்

## அரசின் போக்கு குறித்தும் கண்டனம்

மண்டூர்,

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மேதினக் கூட்டம் நேற்றுப் பிற்பகல் மட்டக்களப்பு காந்தி சிலை மைதானத்தில் நடைபெற்ற போது ஆண்களும் பெண்களுமாக பெருந்திரளான வாலிபர்களும் வந்து கலந்து கொண்டனர். மேதினக் கூட்டத்தில்கலந்து கொள்வதற்கென இங்கு வந்திருந்த ஈ. பி. ஆர். எல். எப். இன் செயலதிபர் திரு. க. பத்மநாபா கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

இதற்கு முன்னதாக ஏறாவூர் பொதுச்சந்தையடியிலிருந்தும், ஆரையம்பதி மகாவித்தியாலயத்திலிருந்தும் மேதின ஊர்வலங்கள் ஆரம்பமாகி மட்டுநகரை வந்தடைந்தன. ஊர்வலத்தில் வந்தோர் அரசின் போக்கினைக் கண்டிக்கும் வகையிலான பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளைத் தாங்கியிருந்தனர். பின்வரும் வாசகங்கள் அங்கு தென்பட்டன:

* இலங்கை அரசே...! நிறுத்து, நிறுத்து திட்டமிட்ட குடியேற்றத்தை!
* தென்னிலங்கை முற்போக்கு சக்திகளை இனங்கண்டு இணைந்து போராடுவோம்!
* சமத்துவம் இம்மண்ணில் மலரும் வரை தொடர்ந்து போராடுவோம்!
* இலங்கை அரசே....! எமது நிதியை கையாடாதே!
* அதிகாரப் பரவலாக்கலை இழுத்தடிக்காதே! இல்லையேல் ஆயுதப் போராட்டம் தொடங்கும்!
* மலையக மக்களின் வாக்குரிமையை துரிதமாக வழங்கு!
* மக்களுக்குத் தேவை சமாதானமும் சுதந்திரமுமே,

ஊர்வலம் முடிவடைந்ததும் காந்தி சிலையருகே ஆரம்பமான கூட்டத்தில் வட-கிழக்கு மாகாண நிதியமைச்சர் திரு. பி. கிருபாகரன், போக்குவரத்து அமைச்சர் ஜனாப் அபூயூசுப் ஆகியோருடன் மாகாண சபை உறுப்பினர்களும் ஈ. பி. ஆர். எல். எப். முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

# கும்புறுப்பிட்டியில் இளைஞர் குடியேற்றத் திட்டம்

## வடக்கு-கிழக்கு மாகாண சபை நடவடிக்கை

(நமது நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கும்புறுப்பிட்டியில் இளைஞர் குடியேற்றத் திட்டமொன்றை உருவாக்க வடக்கு-கிழக்கு மாகாண மனித வள இளைஞர் விவகார அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

முதற்கட்டமாக 50 தமிழ் இளைஞர்களுக்கும், 25 முஸ்லிம் இளைஞர்களுக்கும், 25 சிங்கள இளைஞர்களுக்கும் தலா இரண்டு ஏக்கர் வீதம் காணி பகிரப்படவுள்ளதாக வடக்கு-கிழக்கு மாகாண மனிதவள இளைஞர் விவகார அமைச்சர் திரு. ஜோர்ஜ் செனிவரத்ன தெரிவித்தார்.

அரை ஏக்கரில் குறுங்காலப்பயிர்களும், அரை ஏக்கரில் புல் வளர்ப்பும், அரை ஏக்கரில் நிரந்தரப் பயிர்களும் மிகுதி அரை ஏக்கரில் வீடு அமைக்கவும் ஒவ்வொரு இளைஞரும் அறிவுறுத்தப்படுவர்.

மேலும் ஒவ்வொரு இளைஞருக்கும் இரண்டு மாடுகள், இரண்டு ஆடுகள், ஐம்பது கோழிகள், ஒரு தேன்பெட்டி ஆகியனவும் வழங்கப்படவிருக்கிறது. இத்திட்டத்தில் இருபத்தைந்து கிணறுகள், உயிர்வாயு நிலையம் என்பனவும் அமைக்கப்படவிருக்கின்றன.

இவ் இளைஞர் குடியேற்றத்திட்டத்திற்கு ஐக்கிய நாடுகள் புனரமைப்பு உயர்ஸ்தானிகராலயத்திடம் நிதி உதவி கோரப்பட்டிருக்கிறது. மேற்படி நிறுவனம் ஆரம்பச் செலவாக இவ்வருடம் இருபத்தைந்து இலட்சரூபா வழங்குமென்று எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

சாதிக் கொடுமைகளுக்கு எதிரான போராட்டங்களிற்கு தன்னை அர்ப்பணித்து ... வர்க்கப் போராட்டங்களில் தோள் கொடுத்து ... இன்று மரணித்துப் போன தோழர். நாகரத்தினத்திற்கு எமது அஞ்சலிகள்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ‘பஸ்களை எரிப்பதை மக்கள் கண்டிக்கவேண்டும்’

### வட-கிழக்கு மாகாண அமைச்சர் அபுயூசுப் கோரிக்கை

(நமது நிருபர்)

வட - கிழக்கு மாகாணத்திற்கு இந்திய அரசு நன்கொடையாக வழங்கிய பஸ் வண்டிகளில் நான்கு விடுதலைப் புலிகளால் எரிக்கப்பட்டுள்ளன. இந்த நாகரிகமற்ற அரசியலுக்கு அப்பாற்பட்ட செயலால் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு ஆளாகியுள்வனர். புனர் வாழ்வு வேலைகள் தடைப்பட்டு வருகின்றன.

இவ்வாறு வடக்கு - கிழக்கு மாகாண போக்குவரத்து, கைத்தொழில் அமைச்சர் ஜனாப் அபுயூசுப் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மாகாண அரசுக்கு எதிரான விடுதலைப் புலிகளின் இந்நடவடிக்கை மக்களையே பாதிக்கின்றது. மக்கள் இதனை வன்மையாக கண்டிப்பதோடு நிற்காமல் இது போன்ற சம்பவங்கள் நடவாது பாதுகாக்கவும் வேண்டும்.

புலிகளுக்கு பயமாக இருக்கிறது என்ற சிறையில் இருந்து மக்கள் வெளிவந்து உண்மையான சமூகப் பொறுப்புடன் செயற்பட வேண்டும். இந்த அர்த்தமற்ற செயல்களை கண்டிப்பதன் மூலமே நாம் இந்த சொத்துக்களை பாதுகாக்கலாம்.

இத்தகைய நடவடிக்கைகள் தொடருமானால் மாகாண அரசு கடும் எதிர் நடவடிக்கைகளை எடுக்கும்.

## தொழிலாளருக்கு வாரம் ஒரு நாள் விடுமுறை வழங்க வேண்டும்

### வடக்கு சிகையலங்கரிப்பாளர் சங்கம் தீர்மானம் நிறைவேற்றம்

(நமது நிருபர்)

சிகையலங்காரத் தொழிலாளர்களுக்கு வாரத்தில் ஒரு நாள் விடுமுறை வழங்கப்பட வேண்டும் என்றும், உடன்பாடு காணப்பட்ட கூலி விகிதத்தையே அலங்கரிப்பு நிலையங்கள் அமுல் நடத்த வேண்டும் என்றும் வட இலங்கை சிகையலங்கரிப்பாளர் சங்கத்தின் சமீபத்திய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் திரு. எஸ். இராசேந்திரம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் வடக்கு - கிழக்கு மாகாணசபை உறுப்பினர் திரு. ப. லோல்ஸ்டன் கலந்து கொண்டார்.

மாகாண உறுப்பினர் கூட்டத்தில் உரையாற்றும் பொழுது, இனக் கலவரத்தின்போதும், இந்திய இராணுவ மோதலின்போதும் பாதிப்புக்குள்ளாகிய சிகையலங்கரிப்பாளர்களுக்கு நிவாரணம் கிடைக்கவேண்டியது அத்தியாவசியமானதொன்று எனக் குறிப்பிட்டார்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தொழிற் சங்க அமைப்பாளர் திரு. அ. இராசலிங்கம், சங்க உறுப்பினர்களான திருவாளர்கள் த. கந்தையா, எஸ். ஜேம்ஸ், வ. தர்மராசா, அன்ரன் இராசலிங்கம் ஆகியோரும் பேசினர்.

## திருமலையில் கடத்தப்பட்ட ஈரோஸ் ‘நாணு’ சடலமாக மீட்பு

### பலியான தமிழ் பொலிஸாரும் இனங்காணப்பட்டனர்

திருகோணமலை,

கடந்த மார்ச் மாதம் 30ஆம் திகதி இனந்தெரியாதோரால் கடத்தப்பட்ட முன்னாள் ஈரோஸ் உறுப்பினரும், கடந்த தேர்தலின் போது மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டாவதுசுயேச்சைக் குழுவின் முதன்மை வேட்பாளருமாகிய திரு. குமாரவடிவேல் (நாணு) கடந்த திங்களன்று சடலமாக மீட்கப்பட்டார்.

துவரங்காடு பகுதியில் மிகவும் மோசமாக அழுகிய நிலையில் கண்டெடுக்கப்பட்ட இவரின் சடலம் உறவினர்களால் அடையாளம் காணப்பட்டது.

திரு. குமாரவடிவேல் மார்ச் 30ஆம் திகதி திருகோணமலை வந்தபோது இனம் தெரியாத நபர்களினால்கடத்திச் செல்லப்பட்டார்.

இதேவேளை கடந்த 13 ஆம் திகதி திருமலை மணிக்கூட்டுக் கோபுரத்தடியில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தையடுத்து காணாமல் போன இரு தமிழ் ரிசேவ் பொலிஸ்காரர்கள் சடலங்களாக மீட்கப்பட்டு அவை அடையாளம் காணப்பட்டுள்ளன. மட்டக்களப்பு களுதாவளையைச் சேர்ந்த திரு. எஸ். இராசநாயகம் (வயது 22) மண்டூரைச் சேர்ந்த, கே. முருகுப்பிள்ளை (வயது 22) ஆகியோரே மரணமானவர்களாவர். இவர்களின் சடலங்கள் மட்டக்களப்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## மூன்று புலிகள் சுட்டுக் கொலை

(பால. விவேகானந்தா)

யாழ்ப்பாணம் கோண்டாவில் டிப்போவிலிருந்து இ.போ.ச. பஸ் ஒன்று ஞாயிற்றுக்கிழமை தமிழ் தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்டுள்ளது.

இதேவேளை காங்கேசன்துறையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் காங்கேசன்துறை பகுதித் தலைவர் எனக் கருதப்படும் ஒருவர் உட்பட மூவர் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்

அவர்களின் சடலங்கள் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி சவச்சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

## வட-கிழக்கு மாகாண உறுப்பினர் நடவடிக்கை

(நமது நிருபர்)

"வன்செயல்கள் காரணமாக பாதிக்கப்பட்ட சீவல் தொழிலாளர்களுக்கு தொழில் ஊக்குவிப்பு நிவாரணமாக 4 ஆயிரம் ரூபா வழங்கவேண்டுமென்று ஐக்கிய சீவல் தொழிலாளர் சங்கம் முன்வைத்த கோரிக்கையை அமுல்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதுடன், அரச வடிசாலையை மீண்டும் இயங்கவைக்கவும் முயற்சிக்கபட்டுள்ளது."

இவ்வாறு வடக்கு—கிழக்கு மாகாண அரசின் யாழ். மாவட்ட உறுப்பினர் திரு. பொ. தங்கராசா மானிப்பாய் பரிஷ் தென்கு. பனம்பொருள் உற்பத்திக் கூட்டுறவுச்சங்க உறுப்பினர்கள் கூட்டத்தில் பேசும் போது குறிப்பிட்டார்.

சங்கத் தலைவர் திரு. ஸ், அன்னலிங்கம் தலைமையில் மானிப்பாய் மெமோரியல் கல்லூரியில் மேற்படி கூட்டம் நடைபெற்றது.

www.tamilarangam.net

# 'சிங்களவர் பேச்சை எதிர்ப்பர் என்பதால் ஈ. பி. ஆர். எல். எப். மீது பழி சுமத்துகிறது அரசு'

## வட-கிழக்கு மாகாணசபை அமைச்சர் ஜோர்ஜ் செனிவிரத்ன கன்னிப் பேச்சு

திருகோணமலை,

வட-கிழக்கு மாகாண சபையின் புதிய உறுப்பினராகவும் அமைச்சராகவும் திரு. ஜோர்ஜ் செனிவிரத்தின கடந்த செவ்வாயன்று ஆளுநர் காரியாலயத்தில் வைத்து ஆளுநர் லெப். ஜெனரல் நளின் செனிவிரத்தின முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

இதன்பின்னர் மாகாண சபைக்கூட்டத்திலும் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

திட்டமிடல், மனிதவள அபிவிருத்தி, இளைஞர் விவகார அமைச்சராக நியமிக்கப்பட்ட திரு. ஜோர்ஜ் செனிவிரத்தின தனது உரையில் கூறியதாவது:-

எனக்கு மிக முக்கியமானதொரு அமைச்சு வழங்கப்பட்டுள்ளது. வட-கிழக்கு மாகாண மக்களுக்கு என்னால் முடிந்த பணிகளைச் செய்வேன். வட-கிழக்கு மாகாணசபையைக் கலைப்பதற்கு சில தீயசக்திகள் செயற்பட்டு வருவதையிட்டு நாம் விழிப்பாக இருக்க வேண்டும்:

திம்பு பேச்சுவார்த்தைக்குமுன் விடுதலைப் புலிகளால் அநுராதபுரத்தில்நடத்தப்பட்டகொலைகள்போன்று இலங்கை அரசுக்கும் புலிகளுக்குமிடையில் பேச்சுவார்த்தை நடைபெறுவதற்குமுன்னர் திருமலை கார் குண்டுவெடிப்புச் சம்பவமும் இடம்பெற்றுள்ளது. இவ்வாறான செயல்களை புலிகள்தான்செய்தார்களென்று கூறினால் சிங்கள மக்கள் பேச்சுவார்த்தைக்கு எதிர்ப்பார்களென்ற காரணத்தினால் அரசாங்கம் ஈ. பி. ஆர். எல். எப்.மீது பழியைச் சுமத்தியுள்ளது.

### முதல்வர் பேச்சு

முதல்வர் திரு. அ.வரதராஜப்பெருமாள் பேசுகையில், திரு. ஜோர்ஜ் செனிவிரத்தின இங்கு புதியவரென்றாலும் பெரும்பாலான உறுப்பினர்களுக்கு அவரைப்பற்றித் தெரியும். முன்னர் அமைச்சராகநியமித்துசத்தியப்பிரமாணம்செய்துசெயற்படாமலிருந்த திரு. தயான் ஜயதிலகவுக்குப் பதிலாகவே திரு. செனிவிரத்தின நியமிக்கப்பட்டுள்ளார். அவர் மக்களோடு ஒன்றிணைந்து தனது பொறுப்பை நிறைவேற்றுவாரென்றார்.

இங்கு நான்கு புதிய உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம்செய்து பதவியேற்றனர்.

ஜனாப் மன்சூர் மௌலானா (அம்பாறை மாவட்டம், ஐ. தே. க.), திரு. கே. ஸ்ரீநிவாசம் (யாழ், மாவட்டம், ஈ. என். டி. எல். எப்.), எஸ். பரமேஸ்வரமூர்த்தி (அம்பாறை ஈ. பி. ஆர். எல். எப்.), எம். ஐ. எம். ஜமால்தீன் (மு. காங்கிரஸ், அம்பாறை) ஆகியோரே சத்தியப்பிரமாணம் செய்து கொண்டவர்களாவர்.

# 'கொலைகளுக்கு எதிராக மக்கள் அணிதிரள வேண்டும்'

## யாழ். அரச அதிபர் மறைவுக்கு முதல்வர் வரதராஜப்பெருமாள் கண்டனம்

(நமது நிருபர்)

யாழ். அரச அதிபர் திரு. மு. பஞ்சலிங்கத்தின் கொலையைக் கண்டித்து வட-கிழக்கு மாகாண சபை முதல்வர் திரு. அ. வரதராஜப்பெருமாள் அனுதாப அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளதாவது:

தமிழ் பேசும் மக்கள் கடும் நெருக்கடிகளை எதிர்நோக்கிய காலகட்டத்தில் மறைந்த யாழ். அரச அதிபர் திரு. மு. பஞ்சலிங்கம் மக்களுக்காக பல சமூகத் தொண்டுகளை ஆற்றினார்.

அராஜகவாதிகளின் ஊழல், துஷ்பிரயோகம் போன்ற மக்கள் விரோத நடவடிக்கைக்கு திரு. பஞ்சலிங்கம் ஒத்துழைப்பு வழங்காமையினால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

'அராஜகவாதிகள், கடந்த ஒரு தசாப்த காலமாக தங்களது நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை என்பதால் பல அரச உயர் அதிகாரிகளையும் கல்விமான்களையும் தமது அற்ப நலனுக்காகச் சுட்டுக் கொன்றுள்ளனர்.

இவ்வாறு புத்தி ஜீவிகளையும் கல்விமான்களையும் சமூகத் தொண்டர்களையும் படுகொலை செய்வதுடன் அதனை மறைக்க பல காரணங்களை முன்வைப்பதும் இன்று சாதாரண நடவடிக்கையாகி விட்டது.

இந்த நடவடிக்கைக்கு எதிராக மக்கள் அணிதிரள வேண்டும் என்பதுடன் சோகத்தில் வாடும் அன்னாரது குடும்பத்திநரும் எனது அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

## அரசு-புலிகள் பேச்சு:

# எல்லோராலும் ஏற்கக் கூடிய தீர்வை எட்ட வேண்டும்

## யாழ் .மேதினக் கூட்டத்தில் கந்தசாமி பேச்சு

(நமது நிருபர்)

இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை எல்லோராலும் ஏற்கக் கூடிய ஒரு நல்ல முடிவுக்கு வரவேண்டும் என்பதே எமது விருப்பாகும் என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும், ஈழ தொழிற்சங்க சம்மேளனமும் இணைந்துயாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடாத்திய மே தினக் கூட்டத்தில் பேசிய போது தோழர் வீ. ஏ. கந்தசாமி கூறினார்.

இன்று உலக நிலைமைகளைக் கவனித்தால் அந்நியத் துருப்புக்கள் வெளியேறுவதைக் காணலாம். அம்மாதிரி இங்கிருந்தும் இந்தியப்படையினர் வெளியேறும் நிலை வந்தே ஆகும் என்றும் அவர் சொன்னார்.

அவர் மேலும் கூறியதாவது:-

போராட்ட வழியிலும், ஜனநாயக வழியிலும் நாம் பெரு முயற்சி செய்ய வேண்டும். எம்மத்தியிலுள்ள இயக்கங்களையும், முற்போக்கு அரசியல் சக்திகளையும் ஐக்கியப்படுத்துவதும் போராட்ட வழியில் மக்களை அணிதிரட்டுவதும் எமது அவசர அவசியப்பணியாகும். இதற்கு இந்த மேதினமும் இங்கு திரண்டுள்ள தொழிலாளி வர்க்கமும், முன் முயற்சி எடுப்பது அவசியம். அதேபோல மாகாண அரசும் தொழிலாளர் விவசாயிகளின் நலன்களைப் பாதுகாக்கவும், நீண்டகாலமாக ஒடுக்குமுறைக்குள்ளான தமிழினத்தின் நலன்களைப் பேணிக் காப்பதிலும் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அனைத்து இயக்கங்களும் ஒன்றுபட்டு திம்பு பேச்சுவார்த்தையில் முன் வைத்த நாலு அம்ச திட்டத்தில் ஊன்றி நின்று எமது ஐக்கியத்திற்கான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

### ஈ. பி. ஆர். எல். எப். எம்.பி. கேட்கிறார்:

# மாகாண சபையை கலைத்து விடுவதற்கு முயற்சி ஒன்று நடைபெறுகிறதா?

## திருமலை குண்டு வெடிப்பு சம்பவத்திற்கு ஈ. பி ஆர்.எல். எப். மீது அபாண்ட பழி ஏன்?

(நமது நிருபர்)

திருமலை குண்டுவெடிப்புச் சம்பவத்துடன் ஈ. பி. ஆர்.எல்.எப். இயக்கத்தை தொடர்புபடுத்தி பழிசுமத்துவதை கண்டிப்பதாக மேற்படி இயக்கத்தின் மத்திய குழு உறுப்பினரும், யாழ். மாவட்ட பாராளுமன்ற எம்.பி.யுமான திரு. பிரேமச்சந்திரன் விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

45 அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்பட்டும், 50க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தும் இருக்கும் திருகோணமலை குண்டு வெடிப்புச் சம்பவத்தினால் நாம் அதிர்ச்சியும் கவலையும் அடைகிறோம். இக்காட்டுமிராண்டிச் செயலைக் கண்டிப்பதோடு பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு எமது அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

வெளிவிவகார அமைச்சரும், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜேரத்ன பொது மக்கள் சொல்வதாகச் சொல்லி எதுவித பொறுப்புமின்றி இச்சம்பவத்தோடு ஈ.பி. ஆர்.எல். எப்.பையும் தொடர்புபடுத்திக் கூறியிருப்பதானது எமக்குக் கவலையையும் சந்தேகத்தையும் ஏற்படுத்துகிறது.

மறைமுகமாக எம்மேல பழியைப் போட முனைவதானது வடக்கு-கிழக்கு மாகாண அரசாங்கத்தின் நியாயாதிக்க-சட்டபூர்வ நிலைமைகளை இழிவுபடுத்தும் முயற்சியாகவே தெரிகிறது. துட்டுவேவ படுகொலை, கின்னியா கலவரம் போன்ற சம்பவங்களோடு எம்மைச் சம்பந்தப்படுத்திவிட எடுத்த முயற்சிகளின் தொடர்ச்சியாகவே, எங்களைக் கொச்சைப்படுத்த மறைமுகமாக இந்தச் சம்பவத்தோடும் தொடர்புபடுத்திப் பேச முற்படுகிறார்கள்.

இந் நிலையில் எமக்கு எழுந்துள்ள கேள்வி என்னவென்றால், மத்திய அரசானது குறிப்பிட்ட சில குழுக்களினால் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் சூழ்நிலை ஒன்றை உருவாக்கி, அதன் பொறுப்பை வடக்கு-கிழக்கு மாகாண அரசின் மேல் சுமத்தி விடுவதன்மூலம் மாகாணசபையைக் கலைத்து விடுவதற்கும், அதிகாரங்களை மாகாணசபைக்கு வழங்குவதை முடிந்தளவுக்கு நிறுத்திவிடவும் முயற்சி ஒன்று நடைபெறுகிறதா?

இதுவிடயமாக உடனடியாக முறையானதும் முழுமையானதுமான விசாரணை ஒன்று நடத்தப்படவேண்டும்.'

# ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்ட வேலைகள்

## உடன் ஆரம்பிக்க கோருகிறார் இராஜகுகனேஸ்வரன் எம்.பி.

வவுனியா.

வவுனியா மாவட்டத்தில் இடைநிறுத்தப்பட்டுள்ள ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தித்திட்ட வேலைகள் மீண்டும் தொடங்கி நடத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்து மத்திய அரசிடம் வலியுறுத்தியுள்ளதாக வன்னி மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான திரு. இராஜா குகனேஸ்வரன் கேசரிக்குத் தெரிவித்தார்.

வட-கிழக்கு மாகாண சபையைப் பொறுத்தமட்டில் 90 வீதமான வேலைகள் பொறுப்பேற்கப்பட்டு, அவற்றை நிறைவேற்றுவதற்கு தேவையான அதிகாரங்களும் வழங்கப்பட்டு வருகின்றது. இதேவேளையில் மத்திய அரசும் சில வேலைத்திட்டங்களை இப்பகுதிகளில் செய்து வருகின்றது.

எனினும் வட-கிழக்கு மாகாணத்தில் முக்கிய பிரச்சினையாக உள்ள திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றத்தைத் தடுப்பதிலும் அவற்றை அகற்றுவதிலும் தமது கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் அதிக கவனஞ் செலுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

மத்திய அரசு இக்குடியேற்றங்களை நிறுத்துவதாக உறுதியளித்துள்ள போதிலும் எந்த அளவு நிறைவேற்றப்படுகின்றது என்பது குறித்து காலம்தான் பதில் சொல்லும் எனவும் திரு. இராஜா குகனேஸ்வரன் தெரிவித்தார்.

# "ஒற்றுமைக்கு இறுதி சந்தர்ப்பம்; தவறின் விளைவுக்கு நீங்களே பொறுப்பு"

## சபையில் ஏ. இம்மானுவேல் சில்வா

(எம். பி. எம். அஸ்ஹர், வி. தனபாலசிங்கம்)

'இந்நாட்டைக் கூறு போடாது அனைவரும் ஒற்றுமையாக வாழ இறுதியாக ஒரு சந்தர்ப்பம் அளிக்க எமது கட்சி எடுத்த முடிவின்படி நாம் செயல்படுகின்றோம். ஒருங்கிணைந்த ஸ்ரீலங்காவில் அதனை சாதிக்க முடியாமல் போனால் அதன் விளைவின் முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டியவர்கள் நீங்கள் தான்' என திரு. ஏ. இம்மானுவேல் சில்வா

### கன்னிப் பேச்சு

சனியன்று பாராளுமன்றத்தில் தமது கன்னிப் பேச்சை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

எம்மைப் பொறுத்தவரை எமது கொள்கையில் நாம் பிடிவாதமாகத் தான் உள்ளோம், எக்காரணம் கொண்டும் எமது மக்களுக்கு துரோகம் விளைவிக்க துணைபோக மாட்டோம்' என்றும் அவர் கூறினார்.

தபால் தந்தி தொலைதொடர்பு அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீது பேசிய அவர் மேலும் கூறியதாவது:-

நான் வன்னி மாவட்டத்தில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் வேட்பாளராகப் போட்டியிட்டு இன்று இச்சபைக்கு வந்துள்ளேன்.

நாம் எமது மக்கள் மத்தியில் ஓர் அமைதியான நிலையை உருவாக்கவும் அவர்களுக்கு சமாதானத்தை உருவாக்கவும் களை இழந்து போன எமது பிரதேசத்தைக் கட்டி எழுப்பவுமே இத்தேர்தலில் போட்டியிட்டோம். இதை எந்தளவு தூரம் எம்மால் சாதிக்க முடியும் என்பது இந்த சபையினுள் வந்த பின்பு தான் ஒரு கேள்வியாக எனக்குள் எழுந்துள்ளது. இங்குவிசேடமாக இந்த சபையில் உள்ள எதிர்க்கட்சியான சுதந்திரக் கட்சி கேட்கும் கேள்வியும் பேசும் பேச்சுக்களும் அதேவேளை அவற்றிற்கு அரசு அளிக்கும் பதில்களும் எமது எதிர்காலத்தைப் பற்றி நன்றாக சிந்திக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் எமக்கு ஏற்படுகின்றது.

எமது மக்களுக்கு ஓர் அமைதியான வாழ்வையும் சமாதானமான சூழ்நிலையையும் அவர்கள் இழந்த ஜனநாயகத்தையும் பெற்றுத் தருவோமென கூறியிருந்தோம். அதை நாம் எமக்குக் கிடைத்துள்ள மாகாண சபையின் ஊடாக இதைச் சாதிக்க முடியுமென நம்பினோம். இன்னும் நம்புகிறோம். நாம் இதை எமது மக்களுக்கு என்ன விலை கொடுத்தும் ஏற்படுத்திக் கொடுப்போம் என்பதில் எனக்கு எள்ளளவேனும் சந்தேகமே இல்லை.

ஆனால் அதை நாம் எப்படி நடைமுறைப்படுத்தவுள்ளோம் என்பது எதிர்க்கட்சியின் கையிலும் ஆளுங்கட்சியின் கையிலும் தான் உள்ளது.

இந்நாட்டைக் கூறு போடாது ஒற்றுமையாக வாழ்வதற்கு இறுதியாக ஒரு சந்தர்ப்பத்தை அளிக்க வேண்டுமென எமது கட்சியான ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி எடுத்த முடிவை ஏற்று அதன்படி செயல்பட்டு வருகின்றோம்.

www.tamilarangam.net

* கடந்த ஏப்ரல் 21 ம் திகதியன்று திருகோணமலையில் வைத்து ENDLF இன் உறுப்பினர் நஸீர் புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

(தினகரன் 24.04.89)

* இந்தியப்படையினரால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் யாழ் பல்கலைக்கழக மாணவனான சுபராஜ் என்பவரை விடுதலை செய்யுமாறு யாழ் பல்கலைக்கழக மாணவர் அவை கோரியுள்ளது.

(வீரகேசரி 22.04.89)

* வடக்கு கிழக்கு மாகாணத்தில் வெலி-ஓயா என்ற புதியதோர் மாவட்டத்தை அறிமுகப்படுத்துவதை மாகாணசபை அனுமதிக்காது என வடக்கு கிழக்கு மாகாணசபையின் முதல்வர் திரு. வரதராஜப்பெருமாள் கூறியுள்ளார்.

(தினபதி 13.04.89)

* வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஜேர்மன் சமஷ்டிக் குடியரசின் உதவியுடன் பாரிய ஆட்டுப்பண்ணைகள் அமைக்கப்படும். இதற்கான உறுதி ஜேர்மன் சமஷ்டிக் குடியரசின் - ஸ்தானிகரால் வடக்கு கிழக்கு மாகாண காணி விவசாய புனர்வாழ்வு அமைச்சர் திரு. கணேசலிங்கத்திடம் வழங்கப்பட்டிருக்கிறது.

(தினபதி 15.04.89)

* 24.04.89 அன்று இரவு மட்டக்களப்பு-குருமன்வெளியில் வைத்து EPRLF ஆதரவாளர்களான ரவி(24 வயது), நாதன்(30 வயது) ஆகியோர் புலிகளின் கொலை வெறிக்குப் பலியாகியுள்ளனர்.

(தினகரன் 27.04.89)

* முல்லைத்தீவில் 02.05.89 அன்று EPRLF தோழர்கள் மீது புலிகள் நடத்திய தாக்குதலில் தோழர்கள் நகுலன், அன்பு, பாசன் ஆகியோர் கொல்லப்பட்டனர். இத்தாக்குதலின் பின்பு படகு மூலம் கடல்மார்க்கமாக தப்பி ஓடமுயன்ற புலிகள் EPRLF தோழர்களால் படகுடன் மூழ்கடிக்கப்பட்டு கொல்லப்பட்டனர்.

(வீரகேசரி 05.05.89)

* யாழ்ப்பாணம் துன்னாலை தெற்கு பகுதியில் வைத்து பருத்தித்துறைப் பகுதி புலிகள் அமைப்பின் தலைவர் மொரீஸ் உட்பட மூவர் இந்திய ஜவான்களால் கொல்லப்பட்டனர். இச்சம்பவத்தின்போது ஏ.கே.47 ரக துப்பாக்கி, குண்டுகளைத் தயாரிக்கப் பயன்படும் ஒரு தொகை உபகரணங்கள் ஆகியனவும் கைப்பற்றப்பட்டன.

(தினபதி 04.05.89)

* "சிறீலங்கா அரசுடனான புலிகளின் பேச்சுவார்த்தை தமிழ் மக்களுக்கு எந்த நலனையும் தராது, மாறாக தமிழ் மக்களை மேலும் அழிவுப் பாதைக்குத்தான் இட்டுச் செல்லும்" இவ்வாறு ரெலோவின் ஒரு பிரிவுத் தலைவர் டாக்டர் ஜி.எஸ்.கந்தசாமி கூறியுள்ளார்

(இந்து 06.05.89)

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"திறமைசாலிகள் கொலைக்கு எதிராக மக்கள் குரல் கொடுக்க வேண்டும்."
-தோழர் பிரேமச்சந்திரன்.

"அராஜக சக்திகள் அநாகரீகமான முறையில் காட்டுமிராண்டித்தனமான முறையில் கொலைகளைப் புரிந்துவருதற்கு எதிராக மக்கள் ஒருமித்து குரல் கொடுக்கவேண்டும்..." இவ்வாறு யாழ் அரச அதிபர் திரு பஞ்சலிங்கம் கொலைசெய்யப்பட்டதைக் கண்டித்து யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் EPRLF இன் மத்தியகுழு உறுப்பினருமான தோழர் பிரேமச்சந்திரன் அறிக்கை விடுத்துள்ளார். 'நாட்டில் இருக்கும் திறமைசாலிகளைக் கொல்வதன் மூலம் இந்த அராஜகசக்திகள் எதைச்சாதித்துக்கொள்ளப் போகின்றன' எனக் கேள்வி எழுப்பியுள்ளார். மக்கள் மௌனிகளாக வாய் மூடி இருப்பதை விடுத்து இவர்களுக்கு சரியான பாடம் புகட்டவேண்டும் என்றும் கோரியுள்ளார்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அலுவலகங்கள் மீது தாக்குதல்.

கொழும்பு கோட்டையிலுள்ள GCSU கட்டிடத்திலுள்ள EPRLF இன் கொழும்பு அலுவலகத்தின் மீது கிறெனைட் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இத்தாக்குதலின்போது பாவிக்கப்பட்ட - கிறெனைட்டுகள் சிறீலங்கா இராணுவத்துக்கு இஸ்ரேலிய 'மொசாட்'டினால் வழங்கப்பட்டதென யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தோழர் பிரேமச்சந்திரன் ஆதாரத்துடன் பாராளுமன்றத்தில் நிரூபித்துள்ளார்.

இதேபோல யாழ் மகாத்மா காந்தி வீதியிலுள்ள EPRLF இன் யாழ்ப்பாண அலுவலகத்தை தாக்க முயன்ற ஓர் ஆயுதம் தாங்கிய குழுவின் முயற்சி EPRLF இனால் முறியடிக்கப்பட்டது.

மலையகத்தில் EPRLF இன் வளர்ச்சியை பொறுக்கமுடியாத விசமிகளால் நுவரெலியாவில் உள்ள EPRLF அலுவலகமும் தீக்கிரையாக்கப்பட்டது.

(டெய்லி நியூஸ், ஐலண்ட் 18.04.89)

* கடந்த மே-1 ம் திகதி முதல் மலையகத்தில் தலவாக்கலை-கொத்மலை வீதியில் இன் அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது. மலையக மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதை- முக்கிய நோக்கமாய் கொண்டே இவ்வலுவலகத்தின் செயல்பாடுகள் அமையும் என அறிவித்துள்ளது.

(தினகரன் 03.05.89)

* வடக்கு கிழக்கு மாகாண அரசாங்கம் மக்கள் தொண்டர் படைக்கு மேலும் 7000 பேரை சேர்க்க உள்ளது.

ஐலண்ட் 12.05.89)

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"நிபந்தனை இல்லாமலே புலிகள் சிறீலங்கா அரசுடன் பேச்சுவார்த்தை."

ஆயிரக்கணக்கான எமது மக்களைக் கொன்று எமது தேசத்தை நிர்மூலம் செய்த சிறீலங்கா நவபாசிச அரசுடன் புலிகள் எந்த நிபந்தனையும் இல்லாமலேயே பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக சிறீலங்கா ஜனாதிபதி பிரேமதாசவும் வெளிவிவகார அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவும் கூறியுள்ளனர்.

"பொதுமக்கள் எமது கரங்களைப்பலப்படுத்த வேண்டும்-" தோழர் கிருபா.

' பொதுமக்கள் எமது கரங்களைப் பலப்படுத்துவதன் மூலமே நாம் மாகாணசபை மூலம்- எமது மண்ணுக்கு போதுமான அபிவிருத்தி வேலைகளைச் செய்யமுடியும் என வடக்கு-கிழக்கு மாகாணசபை நிதியமைச்சர் தோழர் கிருபாகரன் கூறியுள்ளார். வடக்கு-கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களை அணுகி பொதுமக்கள் தமது பிரச்சனைகளை எடுத்துக் கூறுவதுடன் - ஆலோசனைகளையும் வழங்க வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

(தினகரன் 13.04.89)

வடக்கு கிழக்குக்கு தனி அச்சகம்! தொலைத்தொடர்பும் அபிவிருத்தியாகும்.

வடக்கு கிழக்கு மாகாணத்துக்கான தனியான அச்சகம் ஒன்றை அமைப்பதற்கான உதவியை வழங்க இந்திய அரசு முன்வந்துள்ளது. இதுபோலவே வடக்கு கிழக்கு மாகாண தொலைத் தொடர்பு சேவையை அபிவிருத்தி செய்யவும் இந்தியா இணக்கம் தெரிவித்துள்ளது. இதுபற்றிய தகவல்களை முதல்வர் வரதராஜப்பெருமாள் தெரிவித்துள்ளார்.

(தினபதி 24.04.89)

அம்பாறை மாவட்டத்தில் நடைபெறும் செயல்கள் குறித்து EPRLF கவலையும் கண்டனமும்.

அம்பாறை மாவட்டத்தின் சில கிராமங்களில் நடைபெற்றுவரும் அண்மைக்காலச் சம்பவங்கள் குறித்து EPRLF கவலையும் கண்டனமும் தெரிவித்துள்ளது, குறிப்பாக இம்மாவட்ட கரையோரப்பகுதிக் கிராமங்களில் நடைபெற்றுவரும் உழவு யந்திரக் கடத்தல்கள், கட்டாய பண -வசூலிப்புக்கள், அறுவடைநெல் வசூலிப்பு என்பவை குறித்து EPRLF இன் அம்பாறை மாவட்ட மத்திய குழு உறுப்பினர் தோழர் சர்மா கண்டனம் தெரிவித்துள்ளார். சில ஆயுதம் தரித்த நபர்களின் தன்னிச்சையான இச்செயல்கள் எல்லோர்மீதும் வெறுப்பையேற்படுத்தி அமைதியை குலைக்கும் சூழலை உருவாக்கும் என்றும் EPRLF அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

(தினகரன் 13.04.89)

வடக்கு-கிழக்கு மக்கள் தொண்டர் படைக்கு முதல் தொகுதி ஆயுதங்கள் வழங்கப்பட்டன.

வடக்கு-கிழக்கில் அமைதியை நிலைநாட்டி பொது மக்களுக்கு போதிய பாதுகாப்பை வழங்குவதற்கு உருவாக்கப்பட்ட மக்கள் தொண்டர் படைக்கு (CVF) முதல் தொகுதி ஆயுதங்கள் வழங்கப்பட்டுள்ளன. 450 சீனத் தயாரிப்பான எஸ்.84 ரக தன்னியங்கித் துப்பாக்கிகள்-

www.tamilarangam.net

மற்றும் 90 ஆயிரம் தோட்டாக்கள் ஆகியன வழங்கப்பட்டுள்ளன.
(சிந்தாமணி 18.04.89)

## வவுனியா மாவட்டத்தில் காணாமற் போனவர்களின் விபரங்கள் திரட்டப்படுகின்றன.

வவுனியா மாவட்டத்தில் 1983 ம் ஆண்டு முதல் இன்றுவரை காணாமல் போனவர்களின் விவரங்களை EPRLF திரட்டுகிறது. காணாமல் போனவர்களது குடும்பங்களுக்கு நிவாரணம் பெற்றுக்கொடுப்பது தொடர்பாகவே இவ்விபரங்கள் திரட்டப்படுகின்றன.

## "பிரஜா உரிமைச் சட்டத்தை தூக்கி எறிந்தாலன்றி நாடற்றவர் பிரச்சனை தீராது-" தோழர் பிரேமச்சந்திரன்.

1984 ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இந்திய-பாகிஸ்தான் பிரஜா உரிமைச் சட்டத்தை அப்படியே தூக்கி எறிந்தாலன்றி இந்நாட்டில் நாடற்றவர் என்ற பிரச்சனை தீரப்போவதில்லை. காலத்துக்குக் காலம் பல ஒப்பந்தங்கள் நாடற்றவர்கள் பிரச்சனை தொடர்பாக செய்யப்பட்டு வந்தபோதும் இவை எதுவுமே எந்தத்தீர்வையும் தரவில்லை- இவ்வாறு யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தோழர் பிரேமச்சந்திரன் பாராளுமன்றத்தில் கூறியுள்ளார். EPRLF, EROS ஆகிய இயக்கங்கள் மலையகத் தொழிலாளர்களது உரிமைகள் தொடர்பாக சர்வதேசரீதியில் குரல் எழுப்பி வந்ததையும் அவர் குறிப்பிட்டார்.
( தினபதி 26.04.89 )

## PLOT முகாம் மீது புலிகள் தாக்குதல்! பலர் பலி.

சிறீலங்கா நவபாசிச அரசுடன் கொழும்பில் கூடிக்குலாவிக்கொண்டிருக்கும் அதேவேளையில் புலிகள் வவுனியா பிரதேசத்திலுள்ள PLOT முகாம் ஒன்றின் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். இத்தாக்குதலில் 42 PLOT இனரும், 12 புலிகளும் கொல்லப்பட்டுள்ளனர்.
(கார்டியன் 23.05.89)

## புலிகளின் கொலை வெறிக்கு தொடர்ந்தும் பலர் பலி.

கொழும்பிலே சிறீலங்கா அரசோடு விருந்துண்ணல், உறவாடல் யாழ்ப்பாணத்தில் தமக்கு எதிரானவர்களுக்கு எதிராக கொலைவெறியாட்டம். இதுதான் புலிகளின் இன்றைய செயல்பாடு. யாழ் அரசாங்க அதிபர் திரு.எம்.பஞ்சலிங்கம் (51 வயது) 01.05.89 காலை நல்லூரில் வைத்து புலிகளால் கொல்லப்பட்டார். இவருடைய உடலை 20 தோட்டாக்கள் துளைத்தன. நல்லூர் கோவில் வீதியில் வைத்தே இச்சம்பவம் நடைபெற்றது. இதே வீதியில் வைத்தே 'முரசொலி' ஆசிரியர் திரு.திருச்செல்வத்தின் மகன் அகிலன் (17 வயது) - கொலைவெறி பிடித்தோரால் சுட்டுக்கொல்லப்பட்டார். இவ்வீதியில்தான் EROS அலுவலகம் இருப்பது குறிப்பிடத்தக்கது. யாழ் மேலதிக அரசாங்க அதிபர் திரு.கே. இராமநாதனும் கடந்த ஏப்ரல் மாதம் 6ம் திகதி தெல்லிப்பளையில் வைத்து புலிகளால் கொல்லப்பட்டுள்ளார்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்